**தலைப்பு 122 – சுற்றுலா மற்றும் காணி அமைச்சு - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 122 – சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஜூன் 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் ஆகியவற்றுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விவரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு இலக்கம் 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் சுற்றுலா மற்றும் காணி அமைச்சின், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை சுற்றுலா மற்றும் காணி அமைச்சின், பொதுத் திறைசேரி மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் சுற்றுலா மற்றும் காணி அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்,தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை பிம் சவியா நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக 5 அரசு நிறுவனங்களுக்கு (இந்த அமைச்சும் உட்பட) வழங்கப்பட்ட ஒதுக்கீடு ரூபா 10,455.66 மில்லியனானதுடன் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, அத் திகதியில் ஏற்கப்பட்ட செலவினம் ரூபா 9,357 மில்லியனாகக் காணப்பட்டது. காணி அமைச்சு நிதிப் பிரமாணம் 208 இன் பிரகாரம் அரசாங்க ஒதுக்கீடுகளை ஒதுக்கி, அவற்றை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு விநியோகித்திருந்தமையை மாத்திரமே மேற்கொண்டிருந்த போதிலும், நிதிப் பிரமாணம் 448, 449 மற்றும் 145 இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய அவ் ஒதுக்கீடுகளைப் பெற்று, செலவிடப்பட வேண்டிய மற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்படும் விதத்தில் செயற்பட்டிருக்கவில்லை. 2024 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீட்டில் ரூபா 619.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் அச் செலவினத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு | சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட செலவின மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு குறித்த ஒதுக்கீடுகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக தயவுடன் தெரிவித்துக் கொள்வதுடன் ஒதுக்கீடுகள் மேற்கொள்கொள்ளப்படுகையில் அங்கீகரிக்கப்பட்ட செலவின மதிப்பீடுகளிற்கு அமைவாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எவ்வாறெனினும், அவ் ஒதுக்கீடுகளைச் செலவிடும் நிறுவனங்களில் அவற்றுடன் தொடர்புடைய உறுதிச் சிட்டைகளும் காணப் படுவதனால், சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து செலவின அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்துக்கொள்வதுடன் அதற்கான உள்ளகக் கணக்காய்வு, அந் | உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பிற்கமைய அச் செலவினம் ஏற்கப்படுவது கண்காணிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிய தகவல்களைப் பேணுவதற்கு அல்லது கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. | |
| (ஆ) | அமைச்சால் மீண்டெழும், மூலதனச் செலவு, அமைச்சரின் செலவினம், பிம் சவிய நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய செலவு மற்றும் காணி கையகப்படுத்தல் செலவினங்களை அமைச்சகம் துல்லியமாக எதிர்வுகூறி அடையாளம் காணப்படவில்லை. 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்திறன் அறிக்கையில், மீண்டெழும், மூலதன மற்றும் பிம்சவியா, காணி கையகப்படுத்தலுக்காக முறையே ரூபா 567 மில்லியன், ரூபா 15 மில்லியன், ரூபா 1000 மில்லியன் மற்றும் ரூபா 9,000 மில்லியன் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதில் எஞ்சியுள்ள ஒதுக்கீடுகள் முறையே ரூபா 50.77 மில்லியன், ரூபா 2.23 மில்லியன், ரூபா 380.44 மில்லியன் மற்றும் ரூபா 6,320 மில்லியன் ஆகும். | மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் துல்லியமான எதிர்வுகூறல்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஆண்டின் போது செயற் படுகையில் நடைமுறையில் ஏற்படும் மாற்றங்கள் ஒதுக்கீடுகள் மீதமாவதற்குத் தாக்கமளித்திருந்தன. | தேவைப்பாட்டின் அடிப்படையில் ஒதுக்கீடுகள் கோரப்பட வேண்டும். |
| (இ) | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக ரூபா 1,857 மில்லியன் ஒதுக்கப்பட்டு ரூபா 253 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமையால் சுற்றுலாத் துறை 14 சதவீத அளவிலான குறைந்தபட்ச செயற்திறனை எட்டியிருந்தது. | செயற்திட்டங்களைத் திட்டமிடுகையில் தாமதம் ஏற்பட்டமை, செயற்படுத்துகையில் எதிர்நோக்க நேர்ந்த சிக்கல் நிலைகள், செயற்திட்டங்களில் திருத்தங்கள் நேர்ந்தமை, கொள்முதல் செய்வதற்காக ஒப்பந்ததாரர்கள் முன்வராமை, பாதகமான வானிலை மற்றும் ஆண்டின் போது தேர்தல்கள் இடம்பெற்றமையால் 14 சதவீத செயல்திறன் அளவை மாத்திரமே அடைவதற்கான காரணமான விடயங்களாகக் குறிப்பிட முடியும். | முன்னுரிமையின் படி செயற்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒதுக்கீடுகள் கோரப்பட வேண்டும். |

## 3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள 2 செயற்திட்டங்களின் கீழ் ஏற்பட்ட ரூபா 38.4 மில்லியன் தொகையான பொறுப்புகளில் உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் | இப் பொறுப்புகள் பிம் சவியா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறித்த திணைக்களத்தால் CIGAS திட்டத்தில் ஆன்லைனில் உள்ளிடப்பட்ட பொறுப்புகள் என்பதால், அப் பரிவர்த்தனைகள் தொடர்பான உறுதிச்சீட்டுக்கள் | பொறுப்புகளைத் துல்லியமாக உறுதிப்படுத்திக்கொள்வதற்கு இயலுமானவகையில் தகவல்களைச் சமர்ப்பிக்க |

| | | |
|---|---|---|
| அவற்றின் துல்லிய நிலையை உறுதிப்படுத்திக்கொள்ள இயலாது போயிருந்தது. | அமைச்சிடம் இல்லை. மேலும் தொடர்புடைய பொறுப்புகளை ஏற்ற நிறுவனங்களிடம் குறித்த உறுதிச்சீட்டுக்கள் உள்ளமையைத் தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | வேண்டும். |

**3.3 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் ஆகியவற்றிற்கு இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பேறுமதி<br>ரூபா மில் | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| (i) | நி.பி 103 (1) ஆ, ஐ மற்றும் 104 (4) | 475,000 | i. 2022 ஏப்ரல் 19 ஆம் திகதிய PD – 2791 ஆம் இலக்க கேப் வாகன விபத்து குறித்து பொலிஸாருக்கும் சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனத்திற்கும் புகார் அளிக்கப்படவில்லை. அவ் விபத்து தொடர்பான இறுதி விசாரணை அறிக்கையின் படி, அவ் இழப்பை வாகனம் இணைக்கப்பட்ட அதிகாரியிடமிருந்து வசூலிக்க பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சு ரூபா 475,000 செலவைச் செலவிட்டு திருத்தியிருந்த போதிலும் 2025 மார்ச் 21 ஆம் திகதி வரையிலும் சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து இழப்பு வசூலித்திருக்கவில்லை. | நி.பி. 104(4) இன் படி, வாகனத்திற்கு ஏற்பட்ட இழப்பு, குறித்த வாகனம் இணைக்கப்பட்ட அதிகாரியிடம் இருந்து வசூலிக்கப்படுவதற்காக பல சந்தர்ப்பங்களில் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டது. எனினும் சாதகமான பதில் இன்மையால், மேலதிக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக குறித்த விடயங்கள் சட்டமா அதிபரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளன. | குறித்த இழப்பை வசூலிக்க வேண்டும். |
| | | | ii நி.பி. 104(1) இன் படி, இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டதை உடனடுத்து அதன் அளவு மற்றும் | வாகன விபத்து தொடர்பாக நி.பி. 104(1) இன் படி, விசாரணை | நி.பி. இன் படி நடவடிக்கைகள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | காரணத்தைக் கண்டறியவும், அதற்குப் பொறுப்பானவர்களைத் தீர்மானிக்கவும் ஒரு முதற்கட்ட விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2024 மார்ச் 30 ஆம் திகதி PH - 0668 ஆம் இலக்க வாகன விபத்துக் குறித்த ஆரம்ப விசாரணைக் குழு 2024 ஜூன் 13 ஆம் திகதியே நியமிக்கப்பட்டிருந்தது. மேலும், விபத்தில் தொடர்புபட்ட சாரதியின் சேவை எந்தப் பரிந்துரையும் இன்றி முடிவுறுத்தப்பட்டிருந்தது. நி.பி. 104(4) இன் படி, இழப்பு அல்லது சேதம் நேர்ந்த நாள் முதல் மூன்று மாதங்களுக்குள் முழு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2025 ஏப்ரல் 10 ஆம் திகதி வரையிலும் விசாரணை நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பாக நி.பி. 103 இன் பிரகாரம் இழப்புகள் மற்றும் சேதங்கள் தொடர்பான பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டு 2024.07.22 அன்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், இந்த வாகன விபத்து தொடர்பான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுசதாக குருநாகல் வெஹெர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி 2024.04.18 ஆம் திகதி அமைச்சிற்கு அறிவித்துள்ளார். சம்பந்தப்பட்ட சாரதி இது தொடர்பாக பொறுப்பானவராக இருப்பின் அது தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கை எடுக்குமாறு வெஹெர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு 2024.12.30 அன்று எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். குறித்த வாகனத்திற்கு ஏற்பட்ட சேதம் குறித்த வாகன முகவர் நிறுவனமான United Motors நிறுவனத்தினால 2024.05.17 அன்று எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இது ரூபா 2.9 மில்லியன் என அறிவிக்கப்பட்டுள்ளது. | எடுக்கப்பட்டு, குறித்த இழப்பை அறவிட்டுக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகள் | 251,476 | சேவையை விட்டு விலகிச் சென்றுள்ள 02 அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 251,476 தொகையான கடன் மீதியை பிரதான கடன்பட்டவர்களியிடமிருந்து வசூலிக்க முடியாத சந்தர்ப்பங்களில் பின்பற்றப்பட வேண்டியதாக குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் பிணையாளி தொடர்பாக எடுக்கப்பட வேண்டியதுடன் | திரு. கே. மானுவல் 25.02.2021 முதல் திறமையின்மை காரணமாக ஓய்வு நிலைக்கு உட்படுத்தப்பட்டு அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 0.16 மில்லியன் தொகையான கடன் மீதியை ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து அறவிட்டுக்கொள்வதற் | கடன் மீதியை அறவிட்டுக் கொள்ள வேண்டும். |

பிரதான கடன்பெறுனர் மரணித்திருப்பின் அவரது வாரிசுகளிடமிருந்து வசூலிக்கப்படாத 01 – 03 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பழைய கடன் மீதிகள் உள்ளமை அவதானிக்கப்பட்டது.

கு அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், 55 வயதை பூர்த்தி செய்யும் 2029 ஆம் ஆண்டிலேயே அவருக்கு ஓய்வூதிய உரித்தாவதால் விண்ணப்பத்தை பின்னர் சமர்ப்பிக்கும் படியான கோரிக்கையுடன் கோப்பு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவருக்கு உரித்தான சம்பளத் திருத்தத்தின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டியிருந்த நிலுவைச் சம்பளத்தில் ரூபா 0.081 மில்லியன் தொகையான இடர் கடன் மீதி தீர்க்கப்பட்டுள்ளது. நிலுவைக் கடன் தொகையைக் கொடுத்துத் தீர்க்கும் படி கோரி குறித்த கடனாளிக்கு 2025.01.03 மற்றும் 2025.03.25 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருமதி சி.எஸ்.வை.எம்.ஜி.எம். ஜயசேகராவின் உரிய பிணையாளியிடமிருந்து ரூபா 0.091 மில்லியனான குறித்த கடன் தொகையை மாதாந்தம் தவணை அடிப்படையில் அறவிடப்படுகின்றது.

## 3.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றுலா மற்றும் காணி அமைச்சருக்கு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் 2022 ஆகஸ்ட் 23 அன்று அரசாங்க உத்தியோகபூர்வ இல்லம் ஒன்று ஒப்பந்தத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்தத்தின் 07 ஆம் பிரிவின் படி வீட்டிற்கு உரிய மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி சேவைகளை வழங்குவதற்கான பட்டியல்களை அமைச்சரின் தனிப்பட்ட செலவில் செலுத்த வேண்டும். எனினும், உத்தியோகபூர்வ இல்லத்திற்கு உரிய நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களுக்காக 2024 ஆம் ஆண்டில் ரூபா 1.06 மில்லியன் தொகையை காணி அமைச்சு செலுத்தியிருந்தது. 1996 செப்தெம்பர் 25 ஆம் திகதிய அமப/96/1985/106/136 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் படி, கௌரவ அமைச்சர்கள் மற்றும் கௌரவ பிரதி அமைச்சர்களின் நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களை செலுத்துவதற்காக மாதாந்தம் ரூபா 0.001 மில்லியன் தொகையை 1996.09.01 ஆம் திகதி முதல் அவர்களின் சம்பளத்திலிருந்து வசூலிப்பதற்கு முடிவு செய்யப் பட்டிருந்தது. இன் படி, ரூபா 1.06 மில்லியன் தொகையை அமைச்சு செலவிட்ட போதிலும் அமைச்சரின் சம்பளத்திலிருந்து 10 மாத காலத்திற்கு ரூபா 0.01 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | அந்த வீட்டிற்கு உரிய மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி சேவை வழங்கலுக்கான பட்டியல்கள் தீர்ப்பனவு 1996 செப்தெம்பர் 18 அன்று கௌரவ அமைச்சர்கள் மற்றும் கௌரவ பிரதி அமைச்சர்களின் நீர் மற்றும் மின்சாரக் கட்டணப் பட்டியல்கள் செலுத்துதல் என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறே, மேற்கண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, கௌரவ அமைச்சரின் சம்பளத்திலிருந்து நீர் மற்றும் மின்சாரக் கட்டணப் பட்டியல்களுக்காக மாதந்தோறும் ரூபா 0.001 மில்லியன் அறவிடப்பட்டு அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக காணி மாநாட்டிற்காக சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் அப்போதைய செயலாளர், காணி உரித்து நிர்ணய ஆணையாளர் நாயகம் மற்றும் காணி அமைச்சின் காணிக் கொள்கை பணிப்பாளர் ஆகிய மூன்று உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர். அந்த மாநாட்டிற்கான பயணச் செலவுகள், பதிவுக் கட்டணம், விமானப் பயணச்சீட்டுக் கட்டணம், போக்குவரத்து வசதிகள், தங்குமிட வசதிகள் மற்றும் உணவு மற்றும் பானங்கள் ஆகியவை வழங்கப்படுவதாக உலக வங்கியின் இலங்கை மற்றும் மாலத்தீவுகளுக்கான முகாமையாளரின் 2024 மார்ச் 13 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது. இவ்வாறே, திறைசேரிச் செயலாளரால் 2024 ஜனவரி 10 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தயில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய | 2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலக காணி மாநாட்டிற்கு உரித்தான அனைத்து செலவுகளையும் ஏற்பதாக உலக வங்கியின் இலங்கை மாலத்தீவு முகாமையாளரின் 2024.03.13 ஆம் திகதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் படி, நாட்டை விட்டு வெளியே பயணம் செய்வதற்கான அங்கீகாரமும் அதிகாரிகளுக்கான அமையக் கொடுப்பனவு, விருந்தோம்பல் கொடுப்பனவு மற்றும் வெப்ப உடைக் கொடுப்பனவு இலங்கை அரசாங்கத்தின் செலவில் வழங்குவதற்கு ஜனாதிபதிச் செயலாளரின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. பயணத்துடன் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி குறித்த படிப்பணம் மாத்திரம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிநாட்டு நிதியுதவி நிறுவனத்தால் முழுச் செலவும் ஏற்கப்பட்டாலன்றி, அதிகாரிகள் வெளிநாட்டு ஆய்வுகள்/ பயிற்சி/ மாநாடுகளில் பங்கேற்கலாகாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் நிதி அமைச்சின் 01/2015/01 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2015 மே 15 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 04(அ) ஆம் பிரிவின் படி, தங்குமிடம் மற்றும் உணவிற்கான செலவுகளை வெளிநாட்டு அரசாங்கம் அல்லது கொடையாளி நிறுவனம் ஏற்கப்படாத விடத்து மாத்திரமே ஒன்றிணைந்த படிக்கொடுப்பனவைப் பெற முடியுமான போதிலும் இரண்டு அதிகாரிகளுக்கும் ஒன்றிணைந்த படிக்கொடுப்பனவாக ரூபா 0.715 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | தொடர்புடைய ஏனைய கொடுப்பனவுகளை இலங்கை அரசாங்கமே ஏற்கலாம் என ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்திருந்தார். அதன்படி, அமையக் கொடுப்பனவும் வெப்ப உடைக் கொடுப்பனவும் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், உலக வங்கியின் மூலம் தங்குமிட வசதிகள் வழங்கப்பட்ட போதிலும், அதில் உணவு உள்ளடங்க மாட்டாது என முன்னாள் சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் 2024.04.29 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தெரிவித்திருந்ததுடன் குறித்த கூட்டிணைந்த படிக்கொடுப்பனவு கோரப்பட்டுள்ளது. குறித்த கோரல்கள் மற்றும் ஜனாதிபதிச் செயலாளரின் 2024.04.05 ஆம் திகதிய கடிதத்தின் படி கூட்டிணைந்த கொடுப்பனவு களும் செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | |
| (இ) | பிம் சவியா திட்டம் செயல்படுத்தப்படாத காணி ஆணையர் திணைக்களத்திற்கு அமைச்சின் ஒதுக்கீட்டில் ரூபா 50 மில்லியன் பிம் சவியா திட்டத்திற்காக 2024 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 0.92 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டு ரூபா 48.6 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. செலவிடப்பட்ட தொகை பிம்சவிய திட்டத்திற்காக செலவிடப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப் பட்டது. | உறுமய திட்டத்தின் கீழ் அரசிறைச் உறுதித் திட்டத்திற்கான ஏற்பாடுகள் காணி ஆணையர் திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெற்றமையால் முன்னைய ஆண்டைப் போல் பிம்சவிய திட்டத்தின் கீழ் கொடுப்பனவுப் பத்திரங்களை வழங்குவதற்காக அந்த ஏற்பாடுகள் செலவிடப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2024 செப்தெம்பர் மாதம் பிம்சவியாவின் கீழ் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் இருந்து ரூபா 100,000 மாத்திரம் தக்க வைத்துக் கொண்டு எஞ்சிய ஏற்பாட்டை கையேற்குமாறு அமைச்சிற்கு அறிவிக்கப் பட்டுள்ளமையால் அது வரையில் ஏற்கப்பட்டுள்ள செலவினங்கள் அனைத்திற் காகவும் ஒதுக்கீடுகளை விடுவிக்கும் ஆரம்பக் கட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட செலவின மதிப்பீட்டிற்கு உட்பட்டு செலவினம் மேற்கொள்ளப் | ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்பட்ட செலவுகளுக்கு மாத்திரமே செலவிடப்படுவதை உறுதி செய்ய வேண்டும். |

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| | பட்டுள்ளதாக தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் படி, மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயலாற்றல் திட்டம் தயாரிக்கப்படுகையிலும் அதனைச் செயற்படுத்துகையிலும் தயாரிக்கப்பட்ட இலக்கு மற்றும் முன்னேற்றம், அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு அமைச்சின் பணி அலகுகள் தாபனப் பிரிவு, காணி அபிவிருத்திப் பிரிவு, கையேற்புப் பிரிவு, கொள்கைப் பிரிவு, செயற்திட்டப் பிரிவு மற்றும் திட்டமிடல் பிரிவு என பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு பிரிவாலும் எதிர்வரும் ஆண்டில் செயற்படுத்தப்படுவதற்காகத் தயாரிக்கப் பட்ட துறைசார் திட்டங்கள் மற்றும் பணிகள் பாதீட்டு மதிப்பீடுகளுக்கான திட்டங்கள் உள்ளடக்கப்பட்ட கோப்பில் காணப்படவில்லை. | எதிர்வரும் ஆண்டிலிருந்து துறைசார் திட்டங்கள் மற்றும் பணிகள் பாதீட்டு மதிப்பீட்டிற்கான திட்டங்கள் உள்ளடக்கப்பட்ட கோவைக்கு, உள்ளடக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒவ்வொரு பிரிவிற்காகவும் தனித்தனியாக செயல்நடவடிக்கைத் திட்டமும் முன்னேற்றமும் தயாரிக்கப்பட வேண்டும் |

### 4.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சேதனப் பசளைச் செயற்திட்டத்திற்காக ரூபா 350 மில்லியன் தொகையை அமைச்சு ஒதுக்கீடாக வழங்கியிருந்த போதிலும் அச் செயற்திட்டம் சாத்திய வள ஆய்விற்கோ முறையான மேற்பார்வையோ இன்றி செயற்படுத்தப்பட்டு முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதில் ஏற்பட்ட முறைகேடுகள் குறித்து விசாரிப்பதற்காக தற்போது விசேட விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் குழுவின் அறிக்கை இதுவரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இச் செயற்திட்டம் 2021 திசெம்பர் மாதத்தின் பின்னர் காணி அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டு, மீதமுள்ள தொகையான ரூபா 1.86 மில்லியன் | காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் சமர்ப்பிக்கப் பட்ட செயற்திட்ட முன்மொழிவின் அடிப்படையில் அமைச்சரவையின் ஒப்புதலுடன் சேதனப் பசளை உற்பத்திச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச் செயற்திட்டம் வடமத்திய மாகாணத்தில் பிரதேச செயலக மட்டத்தில் செயற்படுத்தப்பட்ட சேதனப் பசளை உற்பத்திச் முன்னோடிச் செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டு வள அகற்றல் தொடர்பாக 2023.03.28 ஆம் திகதிய அமப/23/0383/615/017 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, விசேட விசாரணைக் குழு ஒன்று | சேதனப் பசளைச் செயற்திட்ட விசேட விசாரணைக் குழுவின் அறிக்கையை தாமத மின்றிப் பெற்று, அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை அமைச்சின் கணக்கிற்குக் கிடைக்கப்பெற்று பொது வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்தது. இருப்பினும், இந்தத் தொகையிலிருந்து EPF, ETF மற்றும் சேதனப் பசளை மையங்களின் மின்சாரக் கட்டணங்களைச் செலுத்துவதற்காக கோரப்பட்ட ரூபா 1.65 மில்லியன் மீள ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்தது. | நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் தலைவர் தொழில் அமைச்சின் மேலதிக செயலாளராவதுடன் அவர் அந்த அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டதை அடுத்து விசேட விசாரணைக் குழுவில் இருந்து விலகியதன் பின்னர் அக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட விவசாய அமைச்சின் மேலதிக செயலாளரால் இதுவரையில் அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.<br>செயற்திட்டம் முடிவடைந்ததும், 2024.06.18 ஆம் திகதி ஆணைக்குழுவின் சேதனப் பசளைச் செயற்திட்டம் என்ற பெயரில் இலங்கை வங்கியின் அனுராதபுரக் கிளையில் பராமரிக்கப்பட்ட நடைமுறைக் கணக்கு மூடப்பட்டு, மீதமுள்ள தொகை அமைச்சின் நடைடமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. EPF மற்றும் ETF செலுத்துதல் தொழில் வழங்கல் நிறுவனத்தின் சட்டப்பூர்வமான பொறுப்பாகும். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முறையான அங்கீகாரத்துடன் பதவிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சேதனப் பசளை உற்பத்திச் செயற்திட்டத்தின் மூலம் முறையாக சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. எனினும், அந்த சம்பளத்தின் அடிப்படையில் தொழில் வழங்குனரால் செலுத்தப்பட வேண்டிய EPF மற்றும் ETF பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. அக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கு ஆணைக்குழுவால் மேற்கொள்ளப் பட்ட கோரிக்கையின் படி அந்தத் தொகை விடுவிக்கப்பட்டது. இலங்கை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய பட்டியலைத் தீர்த்திருக்கவில்லை என ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டு குறித்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. | |
| (ஆ) | பிம் சவியா நிகழ்ச்சித்திட்டம் 1998 ஆம் ஆண்டின் போது ஓர் ஒழுங்குமுறை நிகழ்ச்சித்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டு இற்றைவரை 26 ஆண்டுகள் கடந்து | பிம் சவியா நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்காக செயற்திட்டப் பிரிவு எந்த | இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒவ்வொரு மாதமும் ஒரு கண்காணிப்பு |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்டுள்ள செலவினத்தொகை ரூபா 9,357 மில்லியன் ஆகும். வழங்கப்பட்ட உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 462,922 ஆனதுடன் பிரச்சனைக்குரியதாகக் காணப்பட்ட காணித் துண்டுகள் தொடர்பாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள கோவைகளின் எண்ணிக்கை 500,739 ஆகும். நாடெங்கிலும் 16 மில்லியன் காணித் துண்டுகள் மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இவற்றில் 2.1 மில்லியன் காணித் துண்டுகள் அளக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மேலும் 13.9 மில்லியன் காணித் துண்டுகள் அளவிடப்படுவதற்கு எஞ்சியுள்ளமையும் ஏனைய புள்ளிவிவரங்களின் படி அவதானிக்கப்பட்டன. நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்திறனான முறையில் மேற்கொள்வதற்காக உள்ளகச் செயன்முறை ஒன்று அமைச்சால் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | திட்டத்தையும் தயாரித்திராமை அவதானிக்கப்பட்டது எனும் அவதானிப்புடன் நான் உடன்படவில்லை.<br>1998 ஆம் ஆண்டு ஓர் செயற்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டு இது வரை 27 ஆண்டுகளாக செயற்பட்டு வந்துள்ளது. ஆரம்ப கட்டங்களில், இதற்காக அமைச்சில் ஒரு தனிப் பிரிவு செயற்பட்டு வந்ததுடன் 2020 ஆம் ஆண்டு செயற்திட்டப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந் நிகழ்ச்சித்திட்டக் கண்காணிப்புப் பொறுப்பும் செயற்திட்டப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டது. இந்தப் பிரிவால் நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு, முன்னேற்ற மதிப்பாய்வு மற்றும் சிக்கல் தீர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு மாதமும் பிம் சவியகள ஒருங்கிணைப்புக் குழுக்கள் கூட்டப்படுகின்றதுடன் அங்கு பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டு நிறுவனங்களுக்கு இடையே உள்ள பிரச்சினைகள் மற்றும் துறையில் எழும் சிக்கலான பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டு தீர்வுகள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறை ஒன்று செயற்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | அமைச்சின் வருடாந்த செயல்திறன் அறிக்கையின் படி, அமைச்சின் கீழ் உள்ள 8 நிறுவனங்களின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு திணைக்களங்கள், நிறுவனங்கள், சபைகள் மற்றும் வாரியங்கள் என பொறுப்பேற்றிருந்த போதிலும், அவற்றின் ஒட்டுமொத்த செயற்திறன் மிகவும் குறைவாக உள்ளமை நாட்டின் அபிவிருத்தித் தேவைகளுக்கு காணி அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய நிறுவனங்கள் உடனடித் தீர்மானங்களை எடுப்பதற்கு தடையாக உள்ளது. அதிகாரச் சட்டங்களும் சட்டங்களும் 2023 ஆம் ஆண்டின் போது செயற்படுவதற்கு திட்டமிடப்பட்ட 12 பணிகள் தொடர்பாக அவ் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள போதிலும், 2024.12.31 இல் உள்ளவாறு அவற்றில் 11 பணி களுக்கு உரிய செயற்பாடுகள் நிறைவடைந்திராமை | அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள், நிறுவனங்கள், சபைகள் மற்றும் வாரியங்களால் அந் நிறுவனங்களுடன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் திருத்தங்களின் தேவைப்பாடுகள் கண்டறியப்பட்டு சுற்றறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. இந்தப் பிரிவால் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைத் திருத்தும் செயற்பாட்டில் தொடர்புடைய வரைவுகளை சட்ட வரைஞர், சட்டமா அதிபர், அமைச்சரவை மற்றும் பாராளுமன்றத்திற்கு தாமதமின்றி அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் திருத்தத்தை உடனடியாக மேற்கொண்டு செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.3 செயற்திட்ட அமுலாக்கத்திலான தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 7 மாவட்டச் செயலகங்களில் 12 செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 228.96 மில்லியன் ஒதுக்கீடுகள் அச் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிராமையால், 2024 திசெம்பர் 31 வரையில் அமைச்சு அந்தப் பணத்தை மீளப் பெற்றிருந்தது. | 7 மாவட்டச் செயலகங்களில் 12 செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 228.96 மில்லியன் ஒதுக்கீடு, 2024 திசெம்பர் 31 வரையில் அமைச்சிற்கு மீளப் பெற்றுக்கொள்ள நேர்ந்தது. | முறையான ஆய்வின் அடிப்படையில் திட்டங்களைத் தயாரித்து செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | டச்சு கோட்டை திருத்தற் பணிச் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 100 மில்லியன் ஆகும். இதில் ரூபா 2.78 மில்லியனான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இது 2 சதவீதமான மிகக் குறைச்த செயற்திறன் அளவை எட்டியிருந்தது. | நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு கூரைக்காக தொல்பொருள் திணைக்களத் தால் பரிந்துரைக்கப்பட்ட மைக்ரோ-லாக் மரத்தைப் பயன்படுத்தி அதன் கட்டுமானப் பணி நிறைவேறும் வரை கட்டிடத்தின் உள் கட்டுமானங்களை மேற்கொள்ள முடிபாதிருந்தது. இந்த மைக்ரோ-லாக் மரத்தை அரச மரக் கூட்டுத்தாபனத் திடம் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் குறித்த மைக்ரோ மரக்குற்றிகள் இன்மையால் இதுவரையில் அந்த மரம கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.<br>2024 ஆம் ஆண்டில் கல்பிட்டி சுற்றுலா வலயத்திற்கான முதன்மை சுற்றுலாத் திட்டம் ஒன்று வடமேல் மாகாண நகர அபிவிருத்தி அதிகாரசபை மூலம் தயாரிக்கப்பட்டு வருவதாலும், அத் திட்டத்தில் கல்பிட்டி கோட்டையும் உள்ளடங்குவதாலும், இந்தக் கோட்டையின் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் அத் திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்படுவதற்காக அந்த முதன்மைத் திட்டம் பூர்த்தியடையும் வரை 2024 ஆம் ஆண்டில் அச் செயற்திட்டத்தை ஆரம்பிக்கவில்லை. | ஒதுக்கீடுகளை மேற்கொள்ள முன்னர் செயற்திட்டத்தின் திட்டங்கள் மற்றும் அடிப்படைத் தேவைகள் தொடர்பாக மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அமைச்சால் செயற்படுத்தப்படும் தாவரவியல் பூங்கா அபிவிருத்தித் திட்டத்திற்காக ரூபா 55 மில்லியன் ஒதுக்கீடு பெறப்பட்ட போதிலும், அதில் எந்த செயற்திறனும் எய்தப்பெறவில்லை. | இச் செயற்திட்டங்களுக்கு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையும் அமைச்சின் சிறு பெறுகைக் குழுவின் தீர்மானத்தின் படி, இந்தப் பெறுகையை வழங்குவதற்காக தகுதியான வழங்குனர் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. மீண்டும் 2024 ஆம் ஆண்டின் போது பெறுகைக் கோரல் மேற்கொள்ளப்பட்டு 02 மாதங்கள் கடந்திருந்தமையால் அந்த ஆண்டின் போது இப் பெறுகை நடவடிக்கையைப் பூர்த்தி செய்யவது கடினமாக இருக்கும் என அவதானிக்கப்பட்டது. | ஒரு திட்டத்துடன் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | கித்துல்கல சுற்றுலாப் பகுதியை மேம்படுத்தும் திட்டத்தின் கீழான 02 செயற்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 24 மில்லியன் ஒதுக்கீட்டிற்கான எந்தவித பணிகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பரண்டி கோவில் வளாகத்தில் கழிப்பறை அமைப்பை நிர்மாணிப்பதற்காக தொல் பொருள் திணைக்களத்தால் ஒரு குறிப்பிட்ட இடத்தை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் காண்பிக் கப்பட்ட இடத்தில் இருந்த பெரிய மரத்தை அகற்றுவதற்கு தொல்பொருள் திணைக்களத்தின் அவதானிப்புகள் தேவைப்பட்டமையால் கட்டுமானப் பணிகள் தாமதமாகியுள்ளன. இச் செயற்திட்டத்தை இவ் ஆண்டிற்குள் பூர்த்தி செய்வது கடினம் என்பதால், செயற்திட்டத்தை இரத்துச் செய்வது மிகவும் உகந்தது என 2024.12.09 ஆம் பகதிய முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. | செயற்திட்டங்கள் தொடர்பாக ஒரு சாத்தியவள ஆய்வு நடாத்தப்பட்டு ஒதுக்கீடு விடுவிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். |
| (உ) | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சால் மேற்கொள்ளப்பட்டு வரும் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 16.7 மில்லியன் தொகையான ஹிரிவடுன்ன பாலத்திற்கு அருகில் இருந்து பின்னவல யானைகள் சரணாலயம் வரையான நடைபாதையின் மீதமுள்ள பகுதியை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்கு இணையாக மேற்கொள்ளப்பட வேண்டிய தெருவோர மின்விளக்கு ஆரம்பத் திட்டத்தில் உள்ளடங்கியிராமை யால் மதிப்பீடுகளைத் திருத்தி அங்கீகாரங்களைப் பெறுவதற்கு | ஹிரிவடுன்ன பாலத்திற்கு அருகில் இருந்து பின்னவல யானைகள் சரணாலயம் வரையிலான நடைபாதையின் மீதமுள்ள பகுதியை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் 2025 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. | முறையான திட்டத்தின் படி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

தாமதமானமையால் அச் செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கு இயலாதுபோயிற்று.

## 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 4.4.1 வாகனக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2025 ஜனவரி 27 ஆம் திகதிய MT/IAI/1/7/1 – 2024 ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் படி, PF 6977 எனும் குழாம் வாகனமான கப் வண்டியில் இருந்து ரூபா 139,321 பெறுமதியான 439.5 லிட்டர் எரிபொருள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளமை வெளிப்பட்டு இது தொடர்பாக 14 நாட்களுக்குள் ஒரு அறிக்கை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு 2025 ஜனவரி 30 ஆம் திகதிய T/IAI/1/7/IAQ – 2025 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) இற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2025 மார்ச் 05 கணக்காய்வுத் திகதி வரையிலும் அவ் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | PF-6977 இலக்க வாகனத்தின் எரிபொருளுக்கும் மைலோ மீற்றருக்கும் இடையே வேறுபாடு உள்ளமை தெரிவிக்கப்பட்டுள்ளது, மேலும் இது குறித்து பரீட்சிக்கப்பட்டு தாமதமின்றி அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு பிரதான உள்ளகக் கணக்காய்வாளருக்கு 2024.08.16 ஆம் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த விசாரணை தொடர்பான அறிக்கை இதுவரை எனக்குக் கிடைக்கப்பெற்றிராததுடன் இது தொடர்பாக இதுவரை அமைச்சுச் செயலாளரால் 2025.03.20 ஆம் திகதி ஓர் குழு நியமிக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டுவருகிறது. | வாகன எரிபொருளை தவறாகப் பயன்படுத்துவது தொடர்பான விசாரணையை விரைவுபடுத்தி இழப்பை அறவிடுவதற்கும் அதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சுற்றுலா அமைச்சிற்குச் சொந்தமான CAU – 4004 என்ற இலக்க ஜீப் 2019 ஆம் ஆண்டில் விபத்திற்கு உட்பட்டிருந்தது. அந்த விபத்திற்குப் பின் அது இலங்கை சுற்றுலா மாநாட்டு பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டு 2023 நவம்பர் 23 ஆம் திகதி ரூபா 11.52 மில்லியன் பழுதுபார்த்தல்கள் பணியகத்தால் மேற்கொள்ளப்பட்டு 05 வருட காலத்திற்குப் பயன்படுத்தப்படுவதற்காக பணியகத்திடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. மீள 2024 நவம்பர் 25 ஆம் திகதி MT/ADM/02/06/08/V ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அமைச்சிற்குப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அரச சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 102, 104, 105 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. இவ்வாறே, இந்த ஜீப் வண்டிக்காக 2024 திசெம்பர் | விபத்திற்கு உட்பட்ட வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக ரூபா 22.1 மில்லியன் தொகையைச் செலுத்த வேண்டியிருந்தது. சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனம் இந்த முழுத் தொகையையும் செலுத்த இயலாததாகக் குறிப்பிட்டு ரூபா 9.3 மில்லியன் தொகையை மாத்திரமே செலுத்த ஒப்புக்கொண்டிருந்தது. ரூபா 22.1 மில்லியன் மொத்தத் தொகையில், ரூபா 11.5 மில்லியன் தொகையைச் செலுத்த இயலாமை மற்றும் திறைசேரியால் நிலுவைத் தொகையை அமைச்சிற்கு வழங்குமாறு கோரியிருந்த போதிலும் அது கிடைக்கப்பெற்றிராமையாலும் எடுக்கப்பட வேண்டிய சிறந்த முடிவாக இலங்கை மாநாட்டு பணியகத்தின் போக்குவரத்துத் தேவைகளைக் கருத்திறகொண்டு அந் நிலுவைத் தொகையான ரூபா | நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிட்டுக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 31 இல் உள்ளவாறு மாநாட்டு பணியகத்தால் செலவிடப்பட்டிருந்த ரூபா 12.4 மில்லியன் தொகையை மீளளிப்புச்செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 11.5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதனைக் காரணமாகக் கொண்டு அதன் தலைவருக்கு இந்த வாகனத்தை 05 ஆண்டுகளுக்கு மட்டுமே பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | |
| (இ) | சுற்றுலா அமைச்சின் கட்டுப்பாட்டில் உள்ள GH - 3129 எனும் மோட்டார் வாகனம் 2023 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் அவ் வாகனத்தின் உரிமை தோட்டக் கைத்தொழில் அமைச்சிடம் உள்ளமையால் அதை அகற்றும் பணியை மேற்கொள்ள முடியவில்லை. இந்த மோட்டார் வாகனம் பற்றிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | GH - 3129 வாகனததை அகற்றும் செயல்முறையை மேற்கொள் வதற்காக அதன் பதிவுச் சான்றிதழைக் கோரி பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும் அச் சான்றிதழ் இதுவரை கிடைக்கப்பெற்றிருக்க வில்லை. அந்தச் சான்றிதழ் வழங்குவதில் மேலும் தாமதம் ஏற்பட்டால், இங்கு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாது என்பதால், வாகனத்தை அந்த அமைச்சிடம் மீள ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த வாகனம் தொடர்பாக இந்த அமைச்சிடம் கோவையோ அல்லது பதிவுப் புத்தகமோ பராமரிக்கப் பட்டிராமையால் இது தொடர்பாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | சொத்தின் உரிமையை கையகப்படுத்தி அப்புறப்படுத்த வேண்டும். |

## 4.5 முகாமைத்துவ நலிவுகள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **(அ)** | 2024 ஜனவரி மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை அமைச்சரின் ஊழியர்களுக்கு ரூபா 11.14 மில்லியன் தொகை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக வழங்கப்பட்ட போதிலும் கடமைக்கு வருகை தந்தமை, புறப்பாடு மற்றும் பணி இடத்தில் இருந்து வெளிச்செல்வதற்கான முன் அங்கீகாரம் பெறப்பட்டமைக்குத் தேவையான ஆவணங்கள் பேணப்பட்டிராததுடன் அவர்களின் பணி நடவடிக்கைகள் மேற்பார்வையிடப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரால் 2017 ஏப்ரல் 19 ஆம் திகதி வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2017 இன் படியும் 2009 ஏப்ரல் 16 ஆம் | அமைச்சரின் ஊழியர்களால் மேற்கொள்ளப்படும் கடமைகளுக்கான பயணச் செலவுகள் மற்றும் மேரதிக நேரக் கொடுப்பனவுகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு விசேட கடமைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு தனியார் செயலாளரின் பரிந்துரையுடன் அனுப்பிவைக்கப்படும். அதன்படி, செயலாளரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். கடமையின் நிமித்தமான களப் பயணங் களுக்கு முன் அனுமதி பெறவேண்டும் என அவ்வப் போது எம்மால் சம்பந்தப்பட்ட | அமைச்சரின் ஊழியர்களைச் சேர்ந்த அதிகாரிகள் பணிக்கு வருகையில், அவர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் கைரேகை இயந்திரத்தின் மூலமும் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிடுவ தன் மூலமும் வருகையும் வெளிச்செல்லலு |

| | | | |
|---|---|---|---|
| | திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 09/2009 மற்றும் 2009 ஜுன் 17 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 09/2009(1) இன் படி பதவியணிக்காக கைவிரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிராமையால் கடமைக்கு வருகைதந்தமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரிகளுக்கு எழுத்து மூலமாகவும், வாய் மொழியாகவும் தெரிவிக்கப் பட்டது. இருப்பினும், நடைமுறை யில் இது மேற்கொள்ளப் பட்டிராமை அவதானிக்கப் பட்டமை தொடர்பில் உடன் படுகிறேன். அமைச்சரின் ஊழியர்களுடன் இணைக்கப்பட்ட சாரதிகள் மேலதிக நேர மற்றும் பயணச் செலவின உறுதிச் சீட்டுக்களைச் சமர்ப்பிக்கையில் அவர்கள் பணிபுரிந்த நாட்களின் வருகை மற்றும் வெளிச்செல்கை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு சாரதிகளின் தினசரி பதிவுத் தாள்கள் அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அப்போது அந்த வாகனங் களைப் பயன்படுத்திய அதிகாரியால் குறித்த வாகன ஓட்டப் பதிவுகளைப் பரிந்துரை செய்து சமர்ப்பிப்பதன் மூலம் குறித்த கடமை செய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | ம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | காணி கையகப்படுத்துதல், அதற்கான இழப்பீடு மற்றும் வட்டி செலுத்துவதற்காக காணி கையகப்படுத்தல்களுக்கான 17,048 கோவைகளில் இழப்பீடு வழங்கப்பட்டு முடிவுறுத்தப்பட்ட கோவைகள் 156 ஆகும். இக் காணி கையகப்படுத்தும் செயல்முறைகாக 149 - 173 கிழமைகளும் சில சந்தர்ப்பங்களில் பல ஆண்டுகள் வரை கடந்திருந்த போதிலும், அது தொடர்பான தகவல் முறைமை ஒன்று இன்மையால் தகவல்களைப் பெறுவதற்கு ஒரு பெரிய தடையாக உள்ளமை அவதானிக்கப்பட்டது.<br>கடந்த 05 ஆண்டுகளில் ரூபா 21,212.23 மில்லியன் ஒதுக்கீட்டில் ரூபா 13,448.43 மில்லியன் காணி கையகப்படுத்துதலுக்கான வட்டியும் இழப்பீடாக செலுத்தப் பட்டிருந்தது. இவ் அனைத்துக் கொடுப்பனவுகளுக்கும் நி.பி. 208, 448, 449 மற்றும் 145 இல் நடைமுறைகள் வழங்கப் பட்டுள்ளன. காணி கையகப் படுத்தலுக்கான தற்போதைய சட்ட கட்டமைப்பின் படி, கடமைகளை நிறைவேற்றுவதில் நீண்ட தாமதம் ஏற்படுவதுடன் இந்த நிலைமை தற்போதைய நிலைக்கு ஏற்றவாறு மாற்றங்களுக்கு உட்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | காணி கையகப்படுத்தும் செயன்முறைக்கு எடுக்கும் நேரத்தைக் குறைத்து, குறித்த செயன்முறையை திறம்படச் செய்யும் நோக்கில், கையகப்படுத்தல் சட்டத்தில் திருத்தம் செய்து தரவு முகாமைத்துவ முறைமையைத் தயாரிப்பதற்கு முன்மொழியப் பட்டுள்ளதுடன் இதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதன்படி, சட்டத்தில் திருத்தம் இதுவரையில் இறுதிச் சட்ட வரைவிற்கான அவதானிப்புகள் சட்ட வரைஞர் திணைக்களத் திற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. தரவு முகாமைத்துவ முறைமைக்கு உரிய தகவல்கள் எனது மேலே குறிப்பிடப்பட்ட இலக்கத்துடன் 2025.04.10 ஆம் திகதி அன்று உங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | காணி கையகப்படுத்தும் செயன்முறையை திறம்படச் செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரசாங்க அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணி கையகப்படுத்துதல் தொடர்பாக நடத்தப்பட்ட கணக்காய்வின் போது 05 சந்தர்ப்பங்களுக்கு உரித்தாக மதிப்பீட்டின் போது இழப்பீட்டுத் தொகை ரூபா 1,861 மில்லியனாகவும், குறித்த இழப்பீடு செலுத்தப்படுகையில் இது ரூபா 7,464.03 மில்லியனாகவும் இருந்தது. இது அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட 116 சதவீதம் முதல் 310 சதவீதம் வரையான செலவின அதிகரிப்பாகும். | சட்டத்தின் படி, கையகப் படுத்தலுக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது, முன்மொழியப்பட்ட காணியின் அண்ணளவான மதிப்பீ டொன்றைப் பெற்றுக் கொள்வதுடன் அந்த மதிப்பீடு ஒரு அண்ணளவான மதிப்பீடொன்றாவதுடன் கையகப்படுத்தலின் பிரிவு 7 இன் கீழ் வர்த்தமானி திகதியில் சரியான மதிப்பீடு வழங்கப்படுகிறது. அதன்படி, மதிப்பீட்டில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது, இது தொடர்பாக மேலதிக தகவல்களுக்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் அணுகுவது பொருத்தமானதாகும் என்பதை நான் அவதானித்துள்ளேன். | அண்ணளவான மதிப்பீடுகளை முடிந்தவரை துல்லியமாகப் பெற வேண்டும். |
| (ஈ) | கம்பஹா மாவட்டத்தின் வத்தளை பிரதேச செயலகப் பகுதியில் ஒரு தனிநபருக்குச் சொந்தமான 01 ஏக்கர், 01 ரூட், 17.25 பேர்ச் அளவிலான காணி கையகப்படுத்தல் உத்தரவின் கீழ், ரூபா ஒரு மில்லியன் மதிப்பிடப்பட்ட காணியின் மதிப்பு, கையகப்படுத்தலின் போது ரூபா 153.93 மில்லியனாகியிருந்தது. | சட்டத்தின் படி கையகப்படுத்துவதற்கான விண்ணப்பத்தை சமர்பிக்கும் போது முன்மொழியப்பட்ட காணியின் அண்ணளவான மதிப்பீடு பெறப்படுவதுடன் அந்த மதிப்பீடு ஒரு அண்ணளவான மதிப்பீடு மட்டுமேயாகும்.<br>கையகப்படுத்தல் சட்டத்தின் பிரிவு 7 இன் கீழ் வர்த்தமானி திகதியிலேயே சரியான மதிப்பீடு வழங்கப்படுகிறது. அதன்படி, மதிப்பீட்டில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது, இது தொடர்பாக மேலதிக தகவலுக்கு மதிப்பீட்டுத் திணைக்களத்தை அணுகுவது பொருத்தமானதாகும் என்பதை நான் அவதானித்துள்ளேன். | அண்ணளவான மதிப்பீடுகளை முடிந்தவரை துல்லியமாகப் பெற வேண்டும். |
| (உ) | காணி கையகப்படுத்தல் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ், வர்த்தமானியில் கட்டளை வெளியிடப்பட்ட நாளிலிருந்து இழப்பீட்டுத் தொகைக்கு மேலதிகமாக வட்டியும் செலுத்தப்பட வேண்டியதுடன் கணக்காய்வால் தெரிவுச் செவ்வைக்காகத் தேர்ந் தெடுக்கப்பட்ட 03 சந்தர்ப்பங் களில், 17 ஆம் பிரிவின் படி வழங்கப்பட்ட தொகை ரூபா 202.31 மில்லியனாவதுடன் அதற்காகச் செலுத்தப்பட்ட வட்டி ரூபா 188.54 மில்லியன் ஆகக் காணப்பட்டது. | காணி கையகப்படுத்தல் சட்டத்தின் விதி 261(4) இன் படி, 38(அ) துணை உத்தரவின் கீழ் கையகப்படுத்தல் மேற்கொள்ளப்படுகையில், அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட திகதி முதல் இழப்பீடு செலுத்தப்படும் திகதி வரை வட்டி செலுத்தப்பட வேண்டும். | காணி கையகப்படுத்தும் செயன்முறையை திறம்பட மேற்கொண்டு வட்டிச் செலவைக் குறைக்க வேண்டும். |
| (ஊ) | காணி கையகப்படுத்துதலுக்காக 05 வருடங்களில் பெறப்பட்ட ஒதுக்கீடு ரூபா 21,212.23 மில்லியனாக இருந்த போதிலும், | காணி கையகப்படுத்தலுக்காகச் செலுத்தப்பட்ட இழப்பீடு மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் | காணி கையகப் படுத்தலுக்காக விடுவிக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| அதிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகை ரூபா 13,448.43 மில்லியனாகும். அத் தொகைக் கான வட்டி மற்றும் இழப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பது குறித்து தனித்தனியாக அடையாளம் காணக்கூடிய வகையில் ஆவணங்கள் பராமரிக்கப்பட்டு கணக்கிடப் பட்டிராததுடன் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் படி, 2023 ஆம் மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மாத்திரம் இழப்பீடாக ரூபா 3,640.27 மில்லியனும் வட்டியாக ரூபா 1765.96 மில்லியனும் குறித்த நடவடிக்கைக்காகச் செலவிடப் பட்டிருந்தன. பிரதேச செயலகங்களுக்கு வெளியிடப்பட்ட ஒதுக்கீடுகளிலிருந்து உண்மை யாகப் பணம் செலுத்தப்பட்ட காணியை ஒப்பிட்டுப் பாரப்பதற்கு கொடுப்பனவுகள் தொடர்பான ஓர் பொழிபறிக்கை பெறப்பட்டு ஒப்பீடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | தொடர்பான தகவல்கள் பிரதேச செயலகப் பிரிவுகளாகவும் காணி கையகப்படுத்தலுக்கான கோவை இலக்கத்தின் படி பிரிக்கப்பட்ட பேரேட்டுக் கோவைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளமையால், மேலதிக ஆய்வுகளுக்காக குறித்த பேரேடுகள் உங்களுக்குச் சமர்ப்பிக்கப்படக் கூடியதாக உள்ளது. | ஒதுக்கீடு தொடர்பாக ஒப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான பதவியணி பற்றிய தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. | இந்த வெற்றிடங்கள் தொடர்பாக ஏற்ற அதிகாரிகளை நியமிக்குமாறு பொது நிர்வாகம், உள்நபட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. | தற்போதைய பணிச்சுமையை மீளாய்வு செய்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | **அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை** | **உள்ளபடியா ன எண்ணிக்கை** | **வெற்றிட எண்ணிக் கை** |
|---|---|---|---|
| | ----- | ---- | ----- |
| சிரேஷ்ட | 29 | 25 | 04 |
| மூன்றாம் | 05 | 02 | 03 |
| இரண்டாம் | 549 | 516 | 33 |
| ஆரம்ப | 44 | 37 | 06 |
| வேறு | 02 | - | - |
| **மொத்தம்** | **629** | **580** | **46** |

அங்கீகரிக்கப்பட்ட 04 சிரேஷ்ட, 03 மூன்றாம் நிலை, 33 இரண்டாம் நிலை பதவிகள் மற்றும் 06 முதன்மை நிலை பதவிகள் வெற்றிட நிலையில் இருந்த போதிலும் தற்போது மேற்கொள்ள வேண்டிய மற்றும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் குறித்து மீளாய்வுகளை மேற்கொண்டு அதன் படி பதவிகளுக்கான அங்கீகாரத்தைப் பெற்று அதற்கேற்ப ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.